முதலமைச்சர் அவர்களால் காணொலி காட்சி வாயிலாக உயர்கல்வித்துறையின் சார்பில் 16.2.2026 அன்று சிவகங்கை மாவட்டம், மானாமதுரை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மாங்குளம் பகுதியில் அடிக்கல் நாட்டப்பட்டுள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவில், கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் பங்கேற்று சிறப்பித்து, கட்டுமானப் பணியினை துவக்கி வைத்தார். உடன் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஆ.தமிழரசி ரவிக்குமார், சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் செல்வி தே.ஜெஃபி கிரேசியா, மானாமதுரை நகர்மன்ற தலைவர் மாரியப்பன் கென்னடி, திருப்புவனம் பேரூராட்சி தலைவர் சேங்கைமாறன், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (மானாமதுரை) முதல்வர் கோவிந்தன் உட்பட பலர் உள்ளனர்.

கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க மதுரையில் 21ஆம் தேதி தமிழ்நாடே வியக்கும் வகையில் சுமார் 1லட்சத்து 89ஆயிரம் தென் மண்டல அளவிலான வாக்குச்சாவடி பாக முகவர்கள் பயிற்சி மாநாடு தொடர்பான மதுரை வடக்கு மாவட்டம் சோழவந்தான் சட்டமன்ற தொகுதி கழக பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் அலங்காநல்லூரில் நடைபெற்றதில் மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, மாவட்ட துணை செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., முன்னிலையில் சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் கழக நிர்வாகிகள் எம்.ஆர்.எம். பாலசுப்பிரமணியன், புதூர் சேகர், சுப.த.சம்பத், தன்ராஜ், முத்தையன், பரந்தாமன், பொரும்பு தனசேகர், பாலராஜேந்திரன், பசும்பொன்மாறன், அருண்குமார், மு.பால்பாண்டியன், ரகுபதி, சத்தியபிரகாஷ், மனோகரவேல் பாண்டியன், ஸ்ரீதர், கிரி, வீரராகவன், ரேணுகாஈஸ்வரி கோவிந்தராஜ், சாமிநாதன், வழக்கறிஞர்கள் கோகுல், முருகன், கார்த்திக், உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள் கழகத்தினர் பங்கேற்றனர்.

நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் மேற்கு மாவட்ட அலுவலகம் டாக்டர்.கலைஞர் அரங்கத்தில் நெல்லை மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில் நடைபெற்றது. உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன், மாநில சுற்றுச்சூழல் அணி தலைவர் முன்னாள் அமைச்சர் பூங்கோதை ஆலடி அருணா, மாநில தொண்டரணி துணை செயலாளர் ஆவின் ஆறுமுகம்,ஆலங்குளம் தொகுதி பார்வையாளர் கணேஷ் குமார் ஆதித்தன், மாவட்ட துணை செயலாளர்கள் மைக்கேல், தமிழ்ச்செல்வன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

தென்காசி தெற்கு மாவட்டம் கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதி தி.மு.க.சார்பில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சர் அவர்களையும்,மகளிர் உரிமைத் தொகையையும்,பெண்களையும் அவதூறாக பேசிய கடையநல்லூர் அ.தி.மு.க.சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ணமுரளி என்ற குட்டியப்பாவை கண்டித்து கடையநல்லூரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் முன்னாள் மாவட்ட பொறுப்பாளர் தலைமைச் செயற்குழு உறுப்பினர் மா.செல்லதுரை தலைமையில் நடைபெற்றது. உடன் தொகுதி பார்வையாளர் குணசேகரன்,மாநில விவசாய அணி இணை செயலாளர் அப்துல்காதர், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆறுமுகச்சாமி,ஷேக் தாவுது,நகர செயலாளர்கள் அப்பாஸ், பீரப்பா உள்பட கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் திரளான பொதுமக்கள் உள்ளனர்.

திருச்செந்தூர் வட்டம் நாசரேத்தில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்ட பயணிகள் நிழற்குடையினை தமிழக மீன்வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன் திறந்து வைத்தார். நிகழ்வில் ஒப்பந்தக்காரர் திவாகர், நாசரேத் பேரூராட்சி தலைவர் நிர்மலா ரவி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம், வழக்கறிஞர் அணி கிருபாகரன், விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ஜனகர் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கழகத் தலைவர் – முதலமைச்சர் பேருரை ! துணை முதலமைச்சர் சிறப்புரை!

தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணியின் LOADING 2.0! நிர்வாகிகள் மற்றும் தன்னார்வலர்கள் சந்திப்பு!

முனைவர் டி.ஆர்.பி.ராஜா தலைமையில் சென்னையில் இன்று பிரம்மாண்ட விழா!

சென்னை, பிப். 20 - திமுக தகவல் தொழில் நுட்ப அணி நிர்வாகிகள் மற்றும் தன்னார்வலர்கள் சந்திப்பு இன்று (பிப்ரவரி 20 வெள்ளிக்கிழமை) மாலை 3 மணி அளவில் சென்னை நந்தனம் ஒய். எம்.சி.ஏ. திடலில் பிரம் மாண்டமாக நடைபெற உள்ளது.

LOADING 2.0 என்ற பெய ரில் நடைபெறும் இந்த சந் திப்பு விழாவிற்கு தகவல் தொழில்நுட்ப அணி செய லாளர் அமைச்சர் முனை வர் டி.ஆர்.பி.ராஜா தலைமை வகிக்கிறார்.

கழகத் தலைவர், முதல மைச்சர் அவர்கள் விழா பேருரை ஆற்றி, தேர்தல் களத்தில் தகவல் தொழில் நுட்ப அணியினரும் தன் னார்வலர்களும் முனைப் புடன் செயல்படுவதற் கான ஆலோசனைகளை வழங்க இருக்கிறார். இந்நி கழ்வில் துணை முதலமைச் சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை ஆற்றுகிறார்.

தகவல் தொழில்நுட்ப அணி இணைச் செயலா ளர் டாக்டர் ஆர் மகேந்தி ரன் வரவேற்புரை ஆற்ற, களத்திலும் தளத்திலும் LOADING 2.0 என்ற தலைப் பில் தன்னார்வலர்கள் மற் றும் நிர்வாகிகளின் கலந்து ரையாடல், தொடரும் திராவிட மாடல் என்ற தலைப்பில் ஊடகவியலா ளர் செந்தில் வேல், திராவி டர் கழக துணை பொதுச் செயலாளர் வழக்கறிஞர் மதிவதனி, தி.மு.க. செய்தி தொடர்பு துணைச் செய லாளர்கள் சூர்யா கிருஷ் ணமூர்த்தி, டாக்டர் அபிசுல்லா ஆகியோர் உரையாற்றுகிறார்கள்.

செயலி அறிமுகம் உள் ளிட்ட பல்வேறு நிகழ்வுகள் நடைபெற உள்ளன.

தகவல் தொழில்நுட்ப அணி சென்னை தெற்கு மாவட்ட ஒருங்கிணைப் பாளர் மணிகண்டன் நாடி முத்து நன்றியுரை ஆற்று கிறார்.

மானாமதுரையில் 'தமிழ்நாடு தலைகுனியாது' பரப்புரை கூட்டம்!

அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் – பொன் முத்துராமலிங்கம் பங்கேற்பு!

சிவகங்கை, பிப். 20 - சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் தமிழக முதல்வர், கழக தலைவர் தளபதி அவர்கள் உத்தர வின் பேரில் கடந்த பிப்ர வரி ஒன்றாம் தேதி முதல் 234 சட்டமன்ற தொகுதி களிலும் 'தமிழ்நாடு தலை குனியாது' பரப்புரை பொதுக் கூட்டம் நடை பெற்று வருகின்றது. அதில் சிவகங்கை மாவட்டத்தில் மானாமதுரை சட்டமன் றத் தொகுதிக்கான தமிழ் நாடு தலைகுனியாது பரப் புரை பொதுக்கூட்டம் மாவட்டக் கழக செயலா ளர் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் தலைமையில் திருமதி தமிழரசி ரவிக்கு மார் எம்.எல்.ஏ. நகர் மன்ற தலைவர் எஸ்.மாரியப்பன் கென்னடி ஆகியோர் முன் னிலையில் நடைபெற்றது.

மானாமதுரை நகர் கழக செயலாளர் க.பொன்னுச் சாமி தலைமையில் ஒன் றிய செயலாளர்கள் துரை. ராஜாமணி, மா.அண்ணா துரை, அ.முத்துச்சாமி ஆகி யோர் வரவேற்று பேசி னார்கள் 'தமிழ்நாடு தலை குனியாது' என்ற பரப்புரை யில் கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப் பினர் முன்னாள் அமைச் சர் பொன். முத்துராம லிங் கம் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

பொதுக்கூட்டத்தில் மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் த.சேங்கை மாறன் திருமதி ஜோன்ஸ் ருசோ, மானாமதுரை சட்ட மன்றத் தொகுதி பொறுப் பாளர் கே.ஆர்.என்.போஸ், முன்னாள் எம்.எல்.ஏ. சுப. மதியரசன், செயற்குழு உறுப்பினர் தா.ராமையா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் நாகனி செந் தில்குமார், ஒன்றிய செயலா ளர்கள் ஆறுசெல்வராஜன், கா .வெங்கட்ராமன், வே. தமிழ்மாறன், எம்.ஏ கடம்ப சாமி, திருமதி வசந்திசேங் கைமாறன், முன்னாள் ஒன் றிய குழு தலைவர்கள் என். மணி, திருமதி லதா அண்ணா துரை, பேரூர் கழக செயலாளர்கள் பி.ஏ. நஜ்மூதீன், நாகூர் கனி பொதுக்குழு உறுப்பினர் கள் த.உதயகுமார், ஏஆர். ஜெயமூர்த்தி, கு.ராசாங்கம், மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன் , மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி.ராஜ்கு மார், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் எம். முருகானந்தம், ஒன்றிய, நகர, கழக நிர்வாகிகள் ரவிச் சந்திரன், கா.மூர்த்தி, முன் னாள் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் தா. இரா.நெடுஞ்செழியன், வி.பாஸ்கரன், நகர் மன்ற துணைத் தலைவர் பாலசுந்த ரம், சி.பி.மன்னர் மன்னன், நா சண்முகப்பிரியா, க. மயில்வாகனன், சே.சுப்பிர மணியன், சுப்பிரமணியன், கா.சோனைமுத்து, ரா.தன சேகரன், பிகாளியப்பன், ஆர்.எல்.ஜேசுராஜ், ஈஸ்வரி தர்மராஜ், ,எஸ். பாலகுமா ரன், அ.அங்குசாமி, கரு. இராமகிருஷ்ணன், சி .சிங் காரம், ஆர்.சண்முகம், ஒன் றிய துணைச் செயலாளர் எஸ்.முத்துக்குமார், மாணவ ரணி கார்த்தி, இளைஞரணி மாரிக்கண்ணன், அன்னவா சல் சண்முகம் அதிய மான் உட்பட ஏராளமானவர்கள் கலந்து கொண்டார்கள்.

பொதுகூட்டத்திற்கான ஏற்பாடுகளை மானாம துரை நகர் கழக செயலா ளர் க.பொன்னுச்சாமி தலைமையில் நிர்வாகிகள் செய்திருந்தார்கள்.

விருதுநகரில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் நகர தி.மு.க. செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.தனபா லன் தலைமையில் ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கு நிதி ஒதுக்காத ஒன்றிய அரசைக் கண்டித்து மாபெ ரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. உடன் சி.பி.எம்.பால சுப்பிரமணியம், சி.பி.ஐ. பால கிருஷ்ணன், ம.தி.மு.க. லட்சுமணன், காங்கிரஸ் கிருஷ்ணமூர்த்தி, விடுதலைச் சிறுத்தை கள் கனி, மக்கள் நீதி மையம் காளிதாஸ், முஸ்லிம் லீக் சையது இப்ராஹிம், ஆதித்தமிழர் பேரவை முத்து, காங்கிரஸ் பாலகிருஷ்ணன் சாமி மற்றும் அனைத்துக் கட்சி நிர்வாகிகளும் பொதுமக்களும் திரளாக கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

திருப்பத்தூர் டாக்டர் எம். கிருஷ்ணன்
பிப்ரவரி 20 (1994)



சுயமரியாதை இயக்கத்தின் சென்னை மாவட்ட இணைச் செயலாளராக பணியாற்றியவர்.

1.4.1945ல் சென்னை செயின்ட் மேரீஸ் மண்டபத்தில் நடைபெற்ற மாவட்ட 14வது திராவிடர் (ஜஸ்டிஸ்) மாநாட்டுச் செயலாளராக பணிபுரிந்தவர்.

1948ஆம் ஆண்டு பெரியார் தலைமையில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு – கருப்புச் சட்டை போரிலும், 1953ல் நடைபெற்ற குலக் கல்வி எதிர்ப்புப் போரிலும் பங்கேற்றவர்.

1971ல் நடைபெற்ற பொதுத்தேர்தலின்போது கழக துணை ஆய்வுக்குழு உறுப்பினராகவும் செயல்பட்டவர்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், பேராசிரியர் ஆகியோரின் அன்பைப் பெற்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.